செ.வெ.எண்: 227

# பத்திரிக்கை செய்தி

நாள்: 22/03/2017

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவுப்படி 22.03.2017 தேதியன்று மாவட்ட உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள், உதவி இயக்குநர் காதி மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக பணியாளர்கள் அடங்கிய குழுக்கள் மூலம் ஒரே நேரத்தில் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் ARS கொட்டாரம், ARS திருமூலநகர் மற்றும் PCB தேரேகால்புதூர் ஆகிய நியாயவிலைக் கடைகளிலும், கல்குளம் வட்டத்தில் KVTCMS குலசேகரம் மற்றும் TEFSCS இரணியல்-1 ஆகிய நியாயவிலைக் கடைகளிலும், விளவங்கோடு வட்டத்தில் PACB முஞ்சிறை, KVTCMS மாறப்பாடி மற்றும் KVTCMS அதங்கோடு ஆகிய நியாயவிலைக் கடைகளிலும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலுள்ள வீடுகளிலும் போலி குடும்ப அட்டைகள் குறித்தும் நியாயவிலை அங்காடிகளின் செயல்பாடுகள் குறித்தும் 100% தீவிர தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இருப்புக்குறைவு, எடைகுறைவு மற்றும் போலிப்பட்டியல் போன்ற இனங்களில் முறைகேடு செய்யப்பட்ட நியாயவிலை அங்காடி பணியாளர்களின் மீது ரூ.22,625/- அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒம்/-சஜ்ஜன்சிங்.ஆர்.சவான்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இ) நாகர்கோவில்.

/உண்மைநகல் ஆணைப்படி/

22/3/17

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

செய்தி-மக்கள் ... நாகர்கோவில்

22/3/17